*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 102/2019***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-2 (LW-3)***

*Name / Father's Name:* ***திருமதி.தங்கத்தாய் க/பெ. கண்ணன்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **27.07.2026.**

துவக்க நேரம் 11.36 F.N

**அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் U/s.355 of BNSS மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை**

1) நான் கெங்கவல்லி அரசு மருத்துவமனையில், அரசு தலைமை மருத்துவராக பணிபுரிந்து தற்பொழுது பணிஓய்வு பெற்று வீட்டில் இருக்கிறேன். கடந்த 2019ம் வருடம் என்னுடைய மேலதிகாரியான இணை இயக்குனர், மருத்துவ மற்றும் ஊரக நலப்பணிகள் அவர்களிடமிருந்து எனக்கு ஒரு புகார் மனு அனுப்பப்பட்டு, அதன் பேரில் நடவடிக்கை எடுக்கும்படி குறிப்பிடப்பட்டிருந்தது.

2) மேற்கண்ட மனு, போலி மருத்துவர் பெரியசாமி மனைவி உமாமகேஷ்வரி என்பவர் கருமந்துறையில் மருத்துவ படிப்பு படிக்காமல் போலி மருத்துவராக செயல்பட்டு வருகிறார் என்றும், அவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டியும் அனுப்பப்பட்டது.

3) என்னுடன் பெத்தநாய்க்கன்பாளையம் அரசு மருத்துவமனையை சேர்ந்த மருத்துவர் ஜெயசெல்வி என்பவரும், கெங்கவல்லியை அரசு மருத்துவமனையை சேர்ந்த மருந்தாளுனர் தில்சாத்பேகம் என்பவரும்,

பெத்தநாய்க்கன்பாளையம் அரசு மருத்துவமனையை சேர்ந்த இளநிலை உதவியாளர் அங்கமுத்து என்பவரும் சம்பவயிடமான கிளாக்காடு செல்லும் ரோட்டில் அமைந்துள்ள ஒரு கட்டிடத்திற்குள் சென்றபொழுது அங்கு எதிரி உமாமகேஷ்வரி இருந்தார்.

4) நாங்கள் அங்கு சென்று பார்த்தபொழுது, அலோபதி மருந்துகள், சிரன்ஜ், காயத்திற்கு கட்டுபோடுவதற்கான மருந்துகள் மற்றும் காட்டன் பஞ்ச், மற்றும் கட்டுபோடுவதற்கான துணி ஆகியவை இருந்தன. அவ்வாறு பார்த்தபொழுது சில மருந்துகள் பயன்படுத்தப்பட்டு மேற்படி மருத்துவ கழிவுகள் குப்பைத்தொட்டியில் போடப்பட்டிருந்தது.

5) மேற்கண்ட இடத்தில் சில நோயாளிகள் மருத்துவம் பார்ப்பதற்காக காத்துக்கொண்டிருந்தனர். மேற்படி நபர்களிடம் விசாரணை செய்தபொழுது அவர்களில் சிலர் அவர்களுக்கு காய்ச்சல் இருப்பதாகவும், அதற்கு மருத்துவம் பார்க்க வந்திருப்பதாகவும், நாங்கள் ஏற்கனவே இங்கு மருத்துவம் பார்த்திருப்பதாகவும் எங்களிடம் சொன்னார்கள். மேலும் நாங்கள் அங்கிருந்த மருந்துகள் குறித்து ஆய்வு செய்து அதுபற்றிய குறிப்புகளை எடுத்துவந்தோம்.

6) மேற்படி இடத்தில் ஆஜரில் இருந்த உமாமகேஷ்வரியிடம் மருத்துவ படிப்பு படித்ததற்கான சான்றிதழ் உள்ளதா, மருத்துவ படிப்பு படித்துள்ளாரா என்று கேட்டதற்கு அவரிடம் மருத்துவ படிப்பு படித்ததற்கான சான்றிதழ் இல்லை, அவர் மருத்துவ படிப்பு படிக்கவில்லை என்பதும் எங்களுக்கு தெரியவந்தது. அதன் பின்பு இதன் சம்மந்தமாக கருமந்துறை காவல் நிலையத்தில் அன்றைய தினமே அவர் மீது நடவடிக்கை எடுக்கச்சொல்லி, புகார் கொடுத்தோம்.

7) அவ்வாறு புகார் கொடுக்க சென்று காவல் நிலையத்தின் அருகில் காத்துக்கொண்டிருந்தபொழுது உமாமகேஷ்வரி மற்றும் சில நபர்களும் சேர்ந்து எங்களை தகாத வார்த்தைகளால் திட்டினார்கள். இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார், என்னிடம் விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார், என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார், என்னை எப்பொழுதுமே விசாரிக்கவில்லையா என்றால் அது பற்றி எனக்கு நியாபகம் இல்லை. நான், எனது முதல் விசாரணையில் கூறியுள்ளதுபோல் நாங்கள், காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றபொழுது, "உமாமகேஷ்வரி மற்றும் சில நபர்களும் சேர்ந்து எங்களை தகாத வார்த்தைகளால் திட்டினார்கள்" என்று வழக்கிற்காக தற்பொழுது நான் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னாலும், அதுபோன்ற ஒரு சம்பவமே நடக்கவில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

2) சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில், எனது முதல் விசாரணையில், "சில நோயாளிகள் மருத்துவம் பார்ப்பதற்காக காத்துக்கொண்டிருந்தனர். மேற்படி நபர்களிடம் விசாரணை செய்தபொழுது அவர்களில் சிலர் அவர்களுக்கு காய்ச்சல் இருப்பதாகவும், அதற்கு மருத்துவம் பார்க்க வந்திருப்பதாகவும், நாங்கள் ஏற்கனவே இங்கு மருத்துவம் பார்த்திருப்பதாகவும் எங்களிடம் சொன்னார்கள்" என்று நான் வழக்கிற்காக தற்பொழுது முதல் முறையாக நீதிமன்றத்தில்தான் நான் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னாலும், அதுபோன்ற ஒரு சம்பவமே நடக்கவில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

3) சம்பவத்தின்பொழுது நான், கெங்கவல்லி அரசு மருத்துவமனையில் தலைமை மருத்துவராகத்தான் பணிபுரிந்தேன் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு தனிப்பட்ட முறையில் எந்த புகார் மனுவும் வரவில்லை என்று சொன்னால் சரிதான்.

4) சுகாதார இணை இயக்குனரிடமிருந்து, எனக்குதான் என்னிடம் காட்டப்படும் புகார மனு வந்ததா என்றால் ஆமாம். எனது தலைமையில்தான், நாங்கள் ஆய்விற்கு சென்று பார்த்தோமா என்றால் தலைமை என்று போடவில்லை, அரசு மருத்துவமனைக்கு பொதுவாக புகார் வந்தது, அதன் பேரில்

நாங்கள் சென்று ஆய்வு செய்தோம். சேலம், இணை இயக்குனரிடமிருந்து, 31.10.2018 ம் தேதி எனக்கு அனுப்பப்பட்ட சுற்றறிக்கையில், 15 தினங்களுக்குள் ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான், மேற்படி சுற்றறிக்கை எனக்கு எந்த நாளில் வந்ததோ, அந்த நாளிலிருந்து 15 தினங்களுக்குள் ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்கவேண்டியிருந்தது, நான், எனது கோப்பை எடுத்து பார்த்ததால்தான் எந்த தேதியில் மேற்படி சுற்றறிக்கை என்னால் பெறப்பட்டது என்று சொல்லமுடியும், நான் அவ்வாறு சுற்றறிக்கை எனக்கு கிடைத்த 15 நாட்களுக்குள் சம்பவம் பற்றி ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்துவிட்டேன்.

5) சேலம், இணை இயக்குனர் நலப்பணிகள் அலுவலக ந.க.எண்.9349/க 3/2018–ன் படி நான், 22.01.2019 ம் தேதிதான் அந்த இடத்தினை ஆய்வு செய்தேன் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக நான் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான், மருத்துவர் ஜெயசெல்வி என்பவர்தான் கொடுத்தார்.

6) கருமந்துறை பகுதிக்கு பெத்தநாய்க்கன்பாளையம் அரசு மருத்துவமனைதான் தலைமை மருத்துவமனை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நான், பணிபுரிந்த கெங்கவல்லி அரசு மருத்துவமனைக்கு உட்பட்ட பகுதி எந்தெந்த பகுதி என்றால் GH –ல் அப்படியெல்லாம் கிடையாது.

7) போலி மருத்துவர் சம்மந்தமாக இதற்கு முன்பு கருமந்துறையில் உள்ள பல பகுதிகளுக்கு சென்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. கெங்கவல்லி வட்டார தலைமை மருத்துவர் என்ற முறையில் எனது எல்லைக்கு உட்பட்ட பகுதியிலும் நான் ஆய்விற்கு சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன்.

8) கெங்கவல்லி, அரசு மருத்துவமனையில் இருந்து சம்பவயிடத்திற்கு அனைவரும் ஒன்றாக சேர்ந்து ஆய்விற்கு சென்றோமா என்றால் அது பற்றி எனக்கு நியாபகம் இல்லை, ஆனால் நாங்கள் ஒன்றாகத்தான் சென்றோம். எந்த

வாகனத்தில் சென்றோம் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை, ஆனால் கெங்கவல்லி அரசு மருத்துவமனைக்கென்று தனியாக வாகனம் இல்லை.

9) நாங்கள் ஆய்விற்கு சென்றதாக சொல்லும் இடத்திற்கு அரை கி.மீ தூரத்தில் கருமந்துறை அரசு ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது என்றால் தூரம் சரியாக தெரியவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக கருமந்துறை பகுதிக்கு ஆய்விற்கு செல்லுமாறு பொதுமக்களிடமிருந்து தனிப்பட்ட முறையில் எனக்கோ, ஜெயசெல்வி என்பவருக்கோ எந்தவித புகாரும் வரவில்லை என்று சொன்னால் சரிதான்.

10) நாங்கள் சம்பவயிடத்தில் நோயாளிகளை பார்த்ததாக சொல்லும் நிலையில், அவர்கள் யார், எந்த ஊரை சேர்ந்தவர்கள், அவர்களது விலாசம் மற்றும் அவர்களது பெயர்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, ஆனால் அவர்கள் அந்த வட்டார பகுதியை சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

11) நாங்கள், ஆய்வு செய்ததாக சொல்லும் பகுதிக்கு அருகில் நிறைய குடியிருப்பு வீடுகள் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு நியாபகம் இல்லை. நாங்கள், ஆய்வு செய்ததாக சொல்லும் இடத்திற்கு அருகில் மெடிக்கல் ஷாப் உள்ளது என்று சொன்னால் அதை நான் பார்க்கவில்லை.

12) நாங்கள் ஆய்வு சென்ற இடத்தில் இருந்ததாக சொல்லும் பொருள்களை குறித்து நான்தான் எழுதினேனா என்றால் இல்லை, நான் அங்கிருந்த பொருட்களை பார்த்து ஆய்வு செய்து, அது பற்றி எனது மருந்தாளுனரிடம் சொல்லி அவர் அதுகுறித்த குறிப்புகள் பற்றி எழுதினார்.

13) நாங்கள் அன்றைய தினம் பார்த்ததாக சொல்லும் பொருட்கள் பற்றி என்னால் தற்பொழுது சொல்லமுடியுமா என்றால் சொல்லமுடியாது, வருடங்கள் ஆகிவிட்டதாலும், மேலும் நிறைய பொருட்கள் கைப்பற்றியதாலும் அதை தற்பொழுது நினைவுபடுத்தி சொல்லமுடியாது. உண்மையிலேயே சம்பவயிடத்திலிருந்து நாங்கள் மருத்துவ பொருட்கள் எடுத்திருந்தால், அது குறித்து தற்பொழுது சொல்லியிருப்பேன் என்றும், அவ்வாறு எடுக்காததால்தான்

அந்த பொருட்கள் குறித்து தற்பொழுது என்னால் சொல்லமுடியவில்லை என்று சொன்னால் சரியல்ல.

14) சம்பவயிடத்தில், இருந்ததாக சொல்லும் நபர்களிடம் நாங்கள் புகார் மனு பெற்று, அதன் பேரில் நடவடிக்கை எடுத்தோமா என்றால் இல்லை, அவர்கள் படிக்காதவர்கள், எழுத படிக்க தெரியாதவர்கள் என்பதால் புகார் எதுவும் வாங்கவில்லை. நாங்கள், சம்பவயிடத்தில் மருத்துவ கழிவுகளை பார்த்தோமா என்றால் பார்த்தோம். அதை கைப்பற்றி காவல் நிலையத்தில் ஒப்படைத்தோமா என்றால் இல்லை, மருத்துவ கழிவுகளை கைப்பற்றினால் அதனால் சில நோய்கள் பரவும் என்பதால் அவ்வாறு கைப்பற்றி ஒப்படைக்கவில்லை. நாங்கள் சம்பவயிடத்தில் மருத்துவ கழிவுகளை பார்க்கவில்லை என்றாலும், மருந்துகளையும் சம்பவயிடத்தில் இருந்து கைப்பற்றவில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

15) உமாமகேஷ்வரியின் கணவர், உரிமம் பெற்று மருந்துக்கடை வைத்துள்ளார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நாங்கள் கைப்பற்றியதாக சொல்லும் பொருட்கள் எளிமையாக மருந்தகத்தில் கிடைக்கக்கூடியவைகள்தான் என்று சொன்னால் சரிதான். அனைத்து மருந்தகங்களிலும் கைப்பற்றியதாக சொல்லும் மருந்துகள் கிடைக்கும் என்றால் அவ்வாறு சொல்லமுடியாது, அவர்கள் வாங்கிவைத்தால்தான் அந்த மருந்துகள் அந்த கடைகளில் கிடைக்கும்.

16) எதிரியின் கணவர் பெரியசாமி என்பவர், உரிமம் பெற்று கமல் மருந்தகம் என்ற பெயரில் மருந்துகடை வைத்துள்ளார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரியின் கணவர் மருந்துக்கடை வைத்துள்ளதால் அதனால் ஏற்பட்ட தொழில் போட்டியின் காரணமாக யாரோ ஒரு நபர் கொடுத்த பொய் புகாரின் பேரில், சேலம் இணை சுகாதார இயக்குனர் அவர்கள் அளித்த உத்தரவின் பேரில் நானும், என்னுடன் மற்ற நபர்களும் சேர்ந்து கருமந்துறையில் உள்ள எதிரியின் கணவருக்கு சொந்தமான மருந்துகடைக்கு

சென்று பார்த்தபொழுது அங்கு புகாரில் சொன்னபடி எந்தவித குற்றச்செயலும் நடைபெறவில்லை என்பதால் நாங்கள் திரும்பவந்துவிட்டு, மீண்டும் எதிரியின் மீது ஏதாவது ஒரு வழக்கு பதிவு செய்யவேண்டும் என்பதற்காக இவ்வழக்கில் முன்னிலைப்படுத்தப்பட்ட மருந்துபொருட்களை வைத்து எதிரியின் மீது பொய் புகார் கொடுத்ததன் பேரில் அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல, நாங்கள் ஒருமுறை தான் ஆய்விற்கு சென்றோம், அங்கு எங்களால் கைப்பற்றப்பட்ட பொருட்கள் பற்றியும், எதிரி போலி மருத்துவம் பார்த்தது பற்றியும்தான் புகார் கொடுத்தோம்.

17) நான் சொன்னவாறு சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் சம்பவயிடம் போகவில்லை என்றாலும், எதிரி, போலி மருத்துவம் பார்க்கவில்லை என்றாலும், வேறு வகையில் பெறப்பட்ட மருந்துபொருட்களை எதிரியிடமிருந்து கைப்பற்றியதாகவும், மேலும் எதிரியிடம் மருத்துவம் பார்க்க, யாரும் நாங்கள் சொன்ன தேதியில் வரவில்லை என்றாலும், எதிரியின் மீது கொடுக்கப்பட்ட பொய் புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் அது தவறு.

18) கருமந்துறை பகுதியில் சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தினை சுற்றி எத்தனை Private Clinic உள்ளது, என்பது பற்றி நான் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை என்று சொன்னால் சரிதான். உண்மையில் நாங்கள் சம்பவயிடம் சென்றிருந்தால் அங்கு எத்தனை Private Clinic உள்ளது, என்பது பற்றி எனக்கு நன்கு தெரிந்திருக்கும் என்று சொன்னாலும், எனது உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க எதிரியின் மீது இவ்வழக்கு புகாரை பொய்யாக கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல, நாங்கள் சம்பவயிடத்திற்கு சென்று என்ன பார்த்து என்ன பொருட்களை கைப்பற்றினோமா அது சம்மந்தமாகத்தான் கருமந்துறை காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன்.

19) எதிரிக்கும், இவ்வழக்கு சம்பவத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 12.49 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.07.27 19:16:31 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 102/2019***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-3 (LW-4)***

*Name / Father's Name:* ***திருமதி.தில்சாத்பேகம் க/பெ. காதர்பாஷா***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **27.07.2026.**

துவக்க நேரம் 12.59 A.N

**அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் U/s.355 of BNSS மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை**

1) நான் கெங்கவல்லி அரசு மருத்துவமனையில், மருந்தாளுனராக பணிபுரிந்து தற்பொழுது பணிஓய்வு பெற்று வீட்டில் இருக்கிறேன். கடந்த 22.01.2019 அன்று காலை 10.00 மணியளவில் இணை இயக்குனர், மருத்துவ மற்றும் ஊரக நலப்பணிகள் அவர்களிடமிருந்து எங்களது மருத்துவமனைக்கு ஒரு புகார் மனு அனுப்பப்பட்டு, அதன் பேரில் நடவடிக்கை எடுக்கும்படி குறிப்பிடப்பட்டிருந்ததால் நாங்கள் போலி மருத்துவர் சம்மந்தமாக ரைடு சென்றோம்.

2) மேற்கண்ட மனு, போலி மருத்துவர் பெரியசாமி மனைவி உமாமகேஷ்வரி என்பவர் கருமந்துறையில் மருத்துவ படிப்பு படிக்காமல் போலி மருத்துவராக செயல்பட்டு வருகிறார் என்றும், அவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டியும் அனுப்பப்பட்டது.

3) கெங்கவல்லியை சேர்ந்த தலைமை மருத்துவர் தங்கத்தாயுடன் நானும், பெத்தநாய்க்கன்பாளையம் அரசு மருத்துவமனையை சேர்ந்த மருத்துவர்

ஜெயசெல்வி என்பவரும், பெத்தநாய்க்கன்பாளையம் அரசு மருத்துவமனையை சேர்ந்த இளநிலை உதவியாளர் அங்கமுத்து என்பவரும் சம்பவயிடமான ஒரு கட்டிடத்திற்குள் சென்றபொழுது அங்கு எதிரி உமாமகேஷ்வரி இருந்தார்.

4) நாங்கள் அங்கு சென்று பார்த்தபொழுது, நோயாளிகள் சில பேர் இருந்தனர், மருந்துகள் கொஞ்சம் இருந்தன. அந்த மருந்துகளை பார்த்து நான் எழுதிக்கொண்டேன். மேற்படி இடத்தில் ஆஜரில் இருந்த உமாமகேஷ்வரியிடம் மருத்துவ படிப்பு படித்ததற்கான சான்றிதழ் உள்ளதா, மருத்துவ படிப்பு படித்துள்ளாரா என்று தலைமை மருத்துவர் தங்கத்தாய் கேட்டதற்கு அவரிடம் மருத்துவ படிப்பு படித்ததற்கான சான்றிதழ் இல்லை, அவர் மருத்துவ படிப்பு படிக்கவில்லை என்பதும் எங்களுக்கு தெரியவந்தது.

5) மருத்துவ சான்றிதழ் இல்லாமல் நீங்கள் மேற்படி மருத்துவம் பார்க்கக்கூடாது என்பது உங்களுக்கு தெரியுமா, தெரியாதா என மருத்துவர் தங்கத்தாய் என்பவர், எதிரியிடம் கேட்டார். அதன் பின்பு இது சம்மந்தமாக கருமந்துறை காவல் நிலையத்தில் அன்றைய தினமே அவர் மீது நடவடிக்கை எடுக்கச்சொல்லி, புகார் கொடுத்தோம். இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார், என்னிடம் விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) இணை இயக்குனர், சேலம் அவர்களிடமிருந்து வந்த கடிதத்தின் அடிப்படையில் கெங்கவல்லி தலைமை மருத்துவர் திருமதி.தங்கத்தாய் அவர்களுடன் நாங்கள் ஒரு குழுவாக, சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு சென்றோமா என்றால் ஆமாம்.

2) எங்களது மருத்துவமனையிலிருந்து கிளம்பும்பொழுது 10.00 மணி இருக்குமா என்றால் 10.00 மணிக்கு சம்பவயிடத்திற்கு சென்றுவிட்டோம். நாங்கள் குழுவாக ஒரே வாகனத்தில்தான் சென்றோமா என்றால் ஆமாம். என்னுடன் இரண்டு மருத்துவர்கள் மற்றும் ஒரு உதவியாளர் வந்தார்களா

என்றால் ஆமாம். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார், என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல, விசாரித்தார்கள். நான், எனது போலிசார் விசாரணையில், மருத்துவர் தங்கத்தாய், உமாமகேஷ்வரியின் படிப்பு சம்மந்தமாக விசாரித்ததாகவும், மருத்துவ படிப்பு படிக்காமல் ஏன் மருத்துவம் பார்க்கிறீர்கள் என்று கேட்டதாகவும் சொன்னேனா என்றால் சொன்னேன். நான் வழக்கிற்காக தற்பொழுதுதான் மேற்படி சங்கதிகளை போலிசார் விசாரணையில் சொன்னதாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னாலும், தற்பொழுது முதன்முதலில் நீதிமன்றத்தில்தான் அந்த சங்கதிகளை சொல்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல.

3) இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பாக நாங்கள், கருமந்துறைக்கு ஆய்விற்கு சென்றுள்ளோமா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு அருகில் குடியிருப்பு வீடுகள் மற்றும் கடைகள் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

4) நான், மருந்தாளுனர் என்பதால் மருந்துகளை பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான். மருத்துவர்கள் எந்தெந்த மருந்துகளை கைப்பற்றினார்கள் என்பது பற்றி எனக்கு தெரியாது என்றாலும், மருத்துவர்களுக்குதான் தெரியும் என்றாலும் சரியல்ல, சம்பவயிடத்தில் கைப்பற்றிய பொருட்கள் பற்றி குறிப்புகள் எடுத்துள்ளோம், அந்த குறிப்புகளை பார்த்தால்தான் தற்பொழுது என்ன மருந்துகள் சம்பவ சமயம் கைப்பற்றினோம் என்று என்னால் சொல்லமுடியும்.

5) இந்த வழக்கில் கைப்பற்றியதாக சொல்லும் மருந்துகள் பயன்படுத்தப்படாத நிலையில் இருந்ததா என்றால் ஆமாம். 1 ஆம்பிள் மருந்தை, ஒரு நபருக்குதான் செலுத்தமுடியும் என்று சொன்னால் சரிதான். பயன்படுத்தியதாக சொல்லும் மருந்துகளை நாங்கள் குப்பைதொட்டியில் பார்த்தபொழுது அவ்வாறு இல்லை என்றும், அவ்வாறு பயன்படுத்திய மருந்து கழிவுகள் அங்கு இல்லை என்றும் சொன்னால் சரிதான்.

6) இவ்வழக்கில் ஒப்படைத்த மருந்து பொருட்கள் அனைத்து மெடிக்கல் கடைகளிலும் கிடைக்கக்கூடியது என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு அருகில் அந்த பகுதியில் MBBS மருத்துவம் படித்துவிட்டு, தனியார் மருத்துவமனைகள் வைத்து மருத்துவர்கள் மருத்துவம் பார்த்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான்.

7) சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு அருகில் கமல் பார்மஸி என்ற பெயரில் மருந்துக்கடை உள்ளது என்று சொன்னால் சரிதான். நான், காவல் நிலையத்திற்கு சென்றேனா என்றால் சென்றேன். காவல் நிலையத்திற்கு நானும், இரண்டு மருத்துவர்களும், உதவியாளரும்தான் சென்றோமே தவிர வேறு யாரும் அங்கு வரவில்லை என்று சொன்னால் சரிதான்.

8) சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு அருகில் கருமந்துறை அரசு ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது என்று சொன்னால் சரிதான். நாங்கள் சம்பவயிடத்திற்கு சென்றபொழுது நோயாளிகள் இருந்ததாக சொல்லியுள்ள நிலையில், அவர்களது பெயர்கள், அவர்களது விலாசம் பற்றி எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான், அவர்களை, மருத்துவர் விசாரித்தபொழுது அவர்கள் உடல்நிலை சரியில்லாமல் காய்ச்சல் இருப்பதாக சொன்னார்கள்.

9) அவ்வாறு நாங்கள் ஆய்விற்கு சென்றபொழுது அங்கு நோயாளிகள் யாரும் இல்லை என்றும், அவர்களிடம் மருத்துவர் விசாரிக்கவில்லை என்றும், வழக்கிற்காக அவ்வாறு நோயாளிகள் இருந்ததாகவும், அவர்களை மருத்துவர் விசாரித்ததாகவும் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

10) நான் சொன்னவாறு சொன்ன தேதி மற்றும் சொன்ன நேரத்தில் நானோ, மருத்துவர்களோ சம்பவயிடத்திற்கு போகவில்லை என்றாலும், சம்பவயிடத்தில் வழக்கு சொத்துக்களை மருத்துவர்கள் கைப்பற்றவில்லை என்றாலும், நாங்கள் சென்றபொழுது நோயாளிகள் அங்கு இல்லை என்றாலும், எதிரி உமாமகேஷ்வரி யாருக்கும் மருத்துவம் பார்க்கவில்லை என்றாலும், உயர் அதிகாரிகளிடம் வந்த புகாரின் அடிப்படையில் எனது உயர் அதிகாரிகள்

கேட்டுக்கொண்டதற்கிணங்க ஒரு பொய்யான புகார் அளிக்கப்பட்டதற்கு, ஆதரவாக நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த சம்பவத்திற்கு முன்பு உமாமகேஷ்வரியின் வீட்டிற்கு நாங்கள் மருத்துவக்குழுவுடன் ஆய்வு செய்து அங்கு எதுவும் இல்லை என்று திரும்பி வந்துவிட்டோம் என்றும், அதன் பின்னிட்டு உயர் அதிகாரிகளிடமிருந்து கடிதம் வரப்பெற்றதன் காரணமாக ஒரு பொய்யான புகார் கொடுத்ததற்கு ஆதரவாக ஒரு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

11) எதிரியின் கணவர் அங்கு கமல் பார்மஸி என்ற பெயரில் மருந்துக்கடை வைத்து குறைந்த விலையில் மருந்து வழங்கியதை, தொழில் போட்டியின் காரணமாக யாரோ ஒரு நபர், இணை இயக்குனருக்கு கொடுத்த பொய் புகாரினை பெற்று, அதனை எங்களுக்கு அனுப்பிவைத்ததன் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யவேண்டும் என்பதற்காக வேறு வகையில் கிடைத்த மருந்து பொருட்களை வைத்து ஒரு பொய்யான புகார் கொடுத்து, அதற்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 01.28 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.07.27 19:16:44 +0530

Judicial Magistrate No.2, Attur.